(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 2(5).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 மே 17 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 61/ ’19

கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ சமல் ராஜபக்ஷ
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ விமல் வீரவங்ச
கௌரவ உதய பிரபாத் கம்மன்பில
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த
கௌரவ ச. வியாழேந்திரன்
கௌரவ கனக ஹேரத்
கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ ரொசான் ரணசிங்க
கௌரவ நாமல் ராஜபக்ஷ
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ டி.வீ. சானக
கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்
கௌரவ எஸ். பீ. திசாநாயக்க
கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ பிரசன்ன ரணவீர
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ ஜனக பண்டார தென்னகோன்
கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன
கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ நிமல் லான்சா

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ விஜித பேருகொட

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ திலும் அமுனுகம

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ துலீப் விஜேசேக்கர

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ ஜயந்த சமரவீர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுதீன் மீதான நம்பிக்கையின்மை,— உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் என அறியப்படும் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் உட்பட ஒன்பது இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்கும் படி இலங்கை இராணுவத் தளபதிக்கு அழுத்தம் பிரயோகித்ததாக இராணுவத் தளபதி 2019 மே 5 ஆம் திகதிய சிலுமின பத்திரிகைக்கு கூறியுள்ளதாலும்;

சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட இம்ஷான் அஹ்மட் ஈப்ராஹிமுக்கு சொந்தமான தொழிற்சாலைக்கு வழமையான நடைமுறைக்கு மாறாக வாணிப மற்றும் கைத்தொழில் அமைச்சிலிருந்து வெற்றுத் தோட்டாக்களை வழங்கியிருப்பதாலும்;

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இராணுவவீரர்கள் நீதிமன்றத்தில் முன்னிருத்தப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக விளக்க மறியலில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட இலங்கை பொலிஸார், குண்டுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக சந்தேகிக்கப்படுகின்ற மேற்படி தொழில்சாலையின் ஊழியர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராக்காமல் 2019.05.06 திகதி அவர்களுக்கு பிணை வழங்க இடமளிப்பதினூடாக அரசியல் அழுத்தம் காணப்பட்டதாக நியாயமான சந்தேகம் எழுவதனாலும்;

அமைச்சர் றிஸாட் பதியுதீன் தலைமை தாங்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொருளாளரான எஸ்.கே.பீ. அலகுதீன் பயங்கரவாதிகளின் முயற்சிகள் பற்றிய தகவல்களை அறிந்திருந்து அதனை அதிகாரிகளுக்கு வெளிப்படுத்தாதிருந்ததன் மூலம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையினாலும்;

அமைச்சரின் நெருங்கிய நண்பர் ஒருவரான அல்ஹாஜ் மொஹமட் இப்றாஹீம் யுசுப் இப்றாஹீமின் மகன்கள் இருவர் தற்கொலை பயங்கரவாதிகளாக செயற்பட்டதனாலும்;

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரான அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகத் தோற்றிய அப்துல் ஹனூத் பயங்கரவாத சந்தேகநபராக கைது செய்யப்பட்டிருப்பதனாலும்;

அமைச்சரின் ஆலோசகர் ஒருவராக தோற்றும் மௌலவி ஒருவர் பயங்கரவாத சந்தேக நபராக கைது செய்யப்பட்டுள்ளதனாலும்;

அமைச்சரின் சகோதரர் ஒருவரான ரிப்கான் பதியுதீன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாது அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டதனாலும்;

உயிர்த்த ஞாயிறன்று பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு அமைச்சர் முறையற்ற அழுத்தங்களை பிரயோகிப்பதாக இராணுவ மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூறும் தகவல்களின் அடிப்படையில் சமூகத்தில் பலம்மிக்க கருத்தொன்று உருவாகியிருப்பதனாலும்; மற்றும்

பயங்கரவாதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருப்பதாக எழுந்திருக்கும் சந்தேகம் தெளிவாக உறுதியாகியிருக்கும் பட்சத்தில் அமைச்சரிடம் இதுபற்றி இதுவரை விசாரிப்பதற்கு பொலிஸாருக்கு இயலாது போனதால் அவர் அமைச்சர் பதவியை வகிப்பதானது விசாரணைகளுக்குத் தடையாக இருக்குமென காணப்படுவதனாலும்;

கௌரவ கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் றிஸாட் பதியுதீன் தொடர்ந்தும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சாராக பதவி வகிப்பதற்கான நம்பிக்கையை இழந்திருப்பதாக இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.